2. தகவல் கோரல்

(அ) பட்டதாரி அல்லாத குடும்பத்தவர்களைச் சார்ந்த மாணவர்களுக்கு ஐந்து மதிப்பெண்கள் வழங்கும் திட்டம் பற்றி 21—8—1990 ஆம் நாளன்று அவையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு மாறாக தொலைக்காட்சி செய்தியில் கூறியுள்ளது குறித்தும். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் அவையில் எடுத்து வைக்கப்பெற்ற கருத்துக்களை முழுமையாக செய்தித்தாள்கள் வெளியிடாதது குறித்தும்.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் விவாதத்தில் கலந்து கொள்ளும் போது நான் 'ஐந்து மார்க் திட்டத்தை' எதிர்க்கவில்லை என்று சொன்னேன்..... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. எச். பாண்டியன் தொடர்ந்து பேசலாமே.

திரு. பி. எச். பாண்டியன் : நேற்றையதினம் விவாதத்தில் கலந்துகொள்ளும்போது 'ஐந்து மார்க் திட்டத்தை' நான் எதிர்க்கவில்லை; என்னுடைய கருத்தை நான் இங்கே வலியுறுத்திப் பேசினேன். நான் பேசியவைகளை எல்லாம் முழுமையாக வெளியிடாவிட்டாலும் பேசிய மற்றக் கருத்துக்களை பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் பேசிய கருத்துக்களை வெளியிடாமல் தொலைக்காட்சி நேற்றையதினம் பி. எச். பாண்டியன் எதிர்ப்புத் தெரிவித்தார் என்று மொட்டையாக ஒரே வார்த்தையில் தெரிவித்து இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், டி.வி.-யிடம் விளக்கம் கேட்டு, திருத்திக்கொள்ள வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் பேசும்பொழுது அந்தக் கருத்துக்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளி வரவில்லை. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவரவில்லை. சில பத்திரிகைகள் அதை இருட்டடிப்பு செய்து இருக்கின்றன என்பதையும் வேதனையோடு தெரிவித்துக் கொள்கின்றேன். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் எடுத்து வைக்கக்கூடிய கருத்துக்களை நம்முடைய நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தெரிவித்தாக வேண்டும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் அதைப் பிரசுரிக்காத பத்திரிக்கைகளிடம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் கூறிய கருத்தினை ஏற்று, இந்த அவையில் அவர் பேசியதற்கு மாறாக வெளியிட்ட செய்திகள்

தொடர்பாக தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாட்களுக்கு எழுதி, விவரம் கேட்டு அதற்குப் பிறகு என்னுடைய தீர்ப்பை இந்த அவையில் அறிவிக்கின்றேன்.

[ஆ] வாயைத் துணியால் கட்டிக்கொண்டு அவைக்கு அ.இ. அ. தி. மு.க உறுப்பினர்கள் வந்திருப்பது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வரதீட்சிதர் : பாயின்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி நேரம் முடிந்ததும் இங்கே சில உறுப்பினர்கள் (வாயைக் கைக்குட்டையால் கட்டிக்கொண்டு அவைக்கு வந்திருக்கும் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைச் சுட்டிக்காட்டி) ஜைன மதத்தினராக ஆகிவிட்டனரா என்று தெரியவில்லை. ஜைன மதத்தினர் தான் வாயை மூடிக்கொண்டு வருவார்கள். ஆனால் இப்போது இவர்கள் எல்லாம் மதம் மாறிவிட்டார்களா அல்லது கட்சி மாறிவிட்டார்களா என்பது தான் கேள்வி. இவர்கள் இப்படிச் செய்வது கட்சி மாறியதற்காகவா அல்லது மதம் மாறியதற்காகவா? அதற்குப் பதில் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல 'Point of order'. யாரும் காதுகளை மூடிக்கொள்ளவில்லை என்று நம்புகிறேன்.

[இ] தாதர் எக்ஸ்பிரஸ் இரயிலில் பயணம் செய்த 3 பெண்களைச் சிலர் கற்பழித்துள்ளதாக வந்துள்ள செய்தி குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் இரயிலில் சென்ற 3 பெண்கள், எட்டு குண்டர்களால் கற்பழிக்கப்பட்டு இருக்கக்கூடிய கோரமான நிகழ்ச்சி சம்பந்தமாக முதல்வர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவந்து, அதற்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆகஸ்ட் 17, வெள்ளிக்கிழமையன்று கேரளா எர்ணாகுளத்தைச் சேர்ந்த 3 பெண்களிடம், 8 பேர் கொண்ட சமூகவிரோதக்கும்பல் சென்னைக்கும் அரக்கோணத்துக்கும் இடையே இந்த நிகழ்ச்சியில் ஈடுபட்டு இருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக குண்டக்கல்லுக்குச் செல்லக்கூடிய பெட்டியாக இருந்ததனால் கூட்டம் குறைவாக இருந்ததாகவும், அந்த கம்பார்ட்மெண்ட்டில் ஆண்களை விட பெண்கள் அதிகம் இருந்ததாகவும் அந்த நேரத்தில் இரயில் புறப்பட்டவுடன் அந்த 8 குண்டர்களும் அந்த வண்டியிலே ஏறி அந்தப் பெண்களை மற்றப் பெண்களுக்கு முன்னால் பகிரங்கமாக பட்டப் பகலில் கற்பழித்து இருக்கக்கூடிய ஒரு அநாகரீகமான செயல் நடந்து இருக்கிறது என்பதை நான் வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.